THE HINDU
22 MAY 2024

# BJP leader hits out at DMK over CB-CID interrogation

**The Hindu Bureau**
COIMBATORE

BJP Tamil Nadu treasurer S.R. Sekhar on Tuesday said that his interrogation by the CB-CID in connection with the seizure of around ₹4 crore in Tambaram last month showed the "mala fide attitude" of the DMK government.

A team of CB-CID officials interrogated Mr. Sekhar at his residence in Coimbatore on Tuesday in connection with the seizure of cash from suspected supporters of the BJP's Tirunelveli Lok Sabha candidate, Nainar Nagenthiran. "This is not party money, and hence, we have approached the court, arguing that the BJP should not be investigated for it. Further, I sent a letter to the CB-CID on Monday, seeking 10 days' time for the interrogation, as I have party work till June 1. And yet, they came to my house this morning without any notice," he alleged.

"I answered their questions. I do not want them to think that I am running away from the interrogation," he said. "The officials asked unrelated questions. It looks like they are interrogating me because of pressure from the DMK government," he said.

THE HINDU
22 MAY 2024

# EC censures former judge-turned-BJP candidate, bars campaign for 24 hours

The Hindu Bureau
NEW DELHI/KOLKATA

The Election Commission (EC) on Tuesday censured former Calcutta High Court judge and BJP candidate from Tamluk in West Bengal Abhijit Gangopadhyay for his remarks against Chief Minister Mamata Banerjee.

Mr. Gangopadhyay has been barred from campaigning for 24 hours beginning 5 p.m. on Tuesday.

In its order, the poll body also asked BJP president J.P. Nadda to issue an advisory on behalf of the party to all candidates and campaigners to make sure that such a lapse does not recur during the campaign.

The EC had issued a show-cause notice to the former Calcutta High Court judge based on a complaint by the Trinamool Congress for his remarks against Ms. Banerjee while addressing a public meeting in Haldia on May 15.



**Inviting wrath:** BJP candidate Abhijit Gangopadhyay campaigning for the Lok Sabha election in East Medinipur. ANI

In its notice, the EC had said Mr. Gangopadhyay's comment was found to be "beyond dignity in every sense of the term" and "in bad taste", and *prima facie* violative of the provisions of the Model Code of Conduct and its advisory to political parties.

It described the remark as a "low-level personal attack".

The former judge said he had written to the poll body requesting it to reconsider its decision, failing which he would approach the courts to quash the notice.

The poll body had stated that it "painfully notes the fact that such abominable words have come from someone of Gangopadhyay's educational and professional background and hence does not remotely deserve any benefit of the doubt."

The EC asked him to remain careful in his public utterances during the campaign.

CONTINUED ON » PAGE 8

## EC censures West Bengal BJP candidate

"The Election Commission has defamed me with this order. I take this very seriously," Mr. Gangopadhyay told the media on Tuesday. "I will, under no circumstances, accept the defamation this EC order has caused me," he asserted.

Senior BJP leader Suvendu Adhikari said the EC should issue an order against Ms. Banerjee first for her alleged remarks against the women of Sandeshkhali, which he claimed provoked Mr. Gangopadhyay's comments against the CM.

"The same action should be taken by the Election Commission against Mamata Banerjee and her nephew (Abhishek Banerjee)," Mr. Adhikari said.

Although the Trinamool Congress has not commented on the EC's order yet, it had earlier protested vehemently against Mr. Gangopadhyay's comments. "Disrespecting women has become part of Modi's guarantee," senior party leader Santanu Sen had said.

The Tamluk Lok Sabha constituency in Purba Medinipur district, where Mr. Gangopadhyay is in the fray on a BJP ticket, goes to the polls on May 25 in the sixth phase of the ongoing parliamentary election. Mr. Gangopadhyay is contesting against Debangshu Bhattacharya of the Trinamool Congress, and Sayan Banerjee of the Communist Party of India-Marxist (CPI-M).

The Hindu (English)
Dated: 22.05.2024

# Vote for a change

## Kashmiris have sought to use the ballot box to seek change from the status quo

The voter turnout in the Srinagar and Baramulla constituencies in the Kashmir valley – Anantnag-Rajouri is to vote on May 25 after the Election Commission of India postponed the election – is well below the national average. While Srinagar registered only 38.5%, preliminary figures from Baramulla indicate a turnout of 59.1%. The national average for the first four phases was 66.95% and 61.61% in the fifth phase, according to early trends. Yet, these numbers in the Valley are salubrious compared to the past – 13% in Srinagar and 34.6% in Baramulla in 2019. Baramulla registered its highest turnout since 1984 (61.1% participation). In the last six years, the elected Assembly was dissolved, the erstwhile State of Jammu and Kashmir bifurcated into two Union Territories, the special status of the province abrogated by the BJP-led Union government, and the Valley subjected to months of Internet shutdowns. Scores of politicians were also arrested. Kashmir still remains India's most securitised region with recurring militant violence. While local body elections have been held since then, the general election is the first major poll with significant contestation involving the Valley's mainstream polity.

Should the increase in turnout be read as a significant reduction in the alienation of the Kashmiri people? The answer is not unambiguous. A substantive section of the voters who turned out have sought a change in the status quo. The limitations on political activity in the Valley since 2018 have constrained citizens who have had little recourse to airing their grievances due to the absence of legislative representation in the Assembly. Thus, livelihood concerns have not been sufficiently addressed, and the greater electoral participation now reflects the need for representation of the electorate's voices. Union Home Minister Amit Shah has stated that the higher polling in these two constituencies is the "greatest testament to rightness" of abrogating the special status that was enshrined in Article 370 – a statement devoid of reason. A truer reflection of the support for the abrogation would have been a favourable mandate for parties endorsing the move, but the BJP did not even field candidates in the Valley. It is clear that it saw the writing on the wall in terms of how it was perceived in the region. Mr. Shah and the BJP should not misinterpret the reasons for the increase in voter participation. The voices in the Valley have given way to some using the ballot box as a medium to get the region out of its political morass. The Indian state must listen and make amends.

The Hindu (English)
Dated: 22.05.2024

# EC censures West Bengal BJP candidate

"The Election Commission has defamed me with this order. I take this very seriously," Mr. Gangopadhyay told the media on Tuesday. "I will, under no circumstances, accept the defamation this EC order has caused me," he asserted.

Senior BJP leader Suvendu Adhikari said the EC should issue an order against Ms. Banerjee first for her alleged remarks against the women of Sandeshkhali, which he claimed provoked Mr. Gangopadhyay's comments against the CM.

"The same action should be taken by the Election Commission against Mamata Banerjee and her nephew (Abhishek Banerjee)," Mr. Adhikari said.

Although the Trinamool Congress has not commented on the EC's order yet, it had earlier protested vehemently against Mr. Gangopadhyay's comments. "Disrespecting women has become part of Modi's guarantee," senior party leader Santanu Sen had said.

The Tamluk Lok Sabha constituency in Purba Medinipur district, where Mr. Gangopadhyay is in the fray on a BJP ticket, goes to the polls on May 25 in the sixth phase of the ongoing parliamentary election. Mr. Gangopadhyay is contesting against Debangshu Bhattacharya of the Trinamool Congress, and Sayan Banerjee of the Communist Party of India-Marxist (CPI-M).

The Times of India
Dated: 22.05.2024

# EC to deploy 919 companies of central forces ahead of WB polls

TIMES NEWS NETWORK

**Kolkata:** The Election Commission is planning to deploy 919 companies of central forces and 29,448 state policemen for phase 6 polling in Bengal on Saturday.

This will the highest number of forces to be deployed in a phase so far in these elections, sources said. A meeting on deployment of security forces was held on Tuesday.

On May 25, polling will be held in Tamluk, Contai, Ghatal, Jhargram, Midnapore, Purulia, Bankura and Bishnupur Lok Sabha seats. Among the 15,619 polling stations, 2,678 (around 17%) have been marked 'critical'. There will be special forces allotment in Jhargram and adjoining districts in view of Maoists' presence. Jhargram will have 133 companies of central forces and there will be eight central forces per booth. Purulia will have 137 companies of central forces and 5,464 state policemen.

**HIGHEST SO FAR**

However, maximum deployment will be made in East Midnapore, where 237 companies will be posted along with 714 state policemen.

THE TIMES OF INDIA
22 MAY 2024

# EC updates turnout figure in fifth phase to 62.2%

**New Delhi:** The fifth phase of Lok Sabha elections for 49 seats on Monday recorded a 62.2% turnout (according to data available at 10.30pm on Tuesday), which may rise marginally when the final data is released by Election Commission. In 2019, polling in this phase was 62.5%.

According to data updated by EC on its voter turnout app, among the seven states and two UTs, Maharashtra, Odisha and J&K recorded higher turnout, while Ladakh and West Bengal registered the maximum drop. The overall turnout for 2019 does not include the delimited seat of Baramulla, which saw 59.1% polling compared to 34.6% five years ago.

In terms of the overall percentage, West Bengal registered the highest turnout of 78.5%, but lower than the last general election when voting was 80.1%. Bihar reported the lowest voting, where five seats went to polls on Monday. Voting was higher in 21 parliamentary constituencies. Eight seats in Maharashtra, out of 13, saw higher polling. TNN

THE TIMES OF INDIA
22 MAY 2024

# EC bars Gangopadhyay from campaigning for 24 hours

## Censures Him For 'Low-level Personal Attack' On Mamata

**Dipak Dash, Debashis Konar & Dwaipayan Ghosh** | TNN

**New Delhi/Kolkata:** Election Commission on Tuesday censured BJP leader and former Calcutta high court judge **Abhijit Gangopadhyay** for his "low-level personal attack" on West Bengal chief minister Mamata Banerjee and debarred him from campaigning for 24 hours from 5pm on Tuesday.



EC said the BJP candidate's statement was a "direct affront to the status of women in India" and he did not "remotely deserve any benefit of doubt", given his educational and professional background.

The poll panel also held the party accountable, saying "this is deemed as a grave failure to enforce one of the basic conducts in the election campaign, even after clear directions from the commission". EC referred to its order of April 1 and a copy sent to the BJP president instructing political parties and candidates to "refrain from any deeds/action/utterances that may be construed as being repugnant to the honour and dignity of women".

**DANCE of DEMOCRACY**

- **Bihar** reported its 1st death in political violence when a **man was killed & 2 others suffered gunshot wounds in a clash between RJD & BJP workers in Saran**
- **Congress chief M Kharge announces that INDIA bloc will select its PM candidate** after poll results | **P 14**
- Facing backlash for his Puri gaffe, **BJP candidate Sambit Patra to observe a 3-day fast as penance | P 14**

The former judge responded to the EC notice on Monday.

After going through his response, EC, in its four-page order said it was "convinced that Gangopadhyay has made a low-level attack and thus violated provisions of model code of conduct". Observing that Gangopadhyay committed "violation to a worse degree", the poll body said women have commanded highest respect in Indian society. It said the Constitution and all institutions have constantly pursued the ideas and ideals of ensuring the rights and dignity of women on all fronts and further empowering them.

The poll panel said Gangopadhyay's statement was "outrightly condemnable when used in respect of any woman, not to speak of a senior political leader and holder of a constitutional position, who he has targeted". It added that he had "brought damage and disrepute to the state of West Bengal that has a distinguished tradition of respect for women".

DECCAN Chronicle

22 MAY 2024

# Low voter turnout not good for democracy

As the elections to the 18th Lok Sabha covers its major portions with voters in 428 of the 543 constituencies exercising their franchise by the fifth of seven phases, the low turnout of voters remains a concern for all, as reflected by the note of the Election Commission of India. While the first four phases saw a collective 66.95 per cent voting, the figure for the fifth was substantially lower at 60.4 per cent.

The EC had earlier called upon voters in the fifth phase, which covered the big cities of Mumbai and Lucknow, to shed their "urban apathy". Its exhortation does appear to have reverberated with the electorate, who in their large numbers chose to skip the exercise and either remain indoors or go off on a tour, thanks to the extended weekend facilitated by the voting on a Monday. As per EC, Maharashtra recorded its lowest polling at 54.33 per cent; Uttar Pradesh also has a lower 57.79 per cent of voters pressing the button on the electronic voting machine. On the higher side, West Bengal had a voting of 76.05 per cent.

It does not augur well for democracy, which is still a work in progress in this country, to have almost half of its electorate say no to one of its key elements — the election. Pundits will come up with a number of reasons for the voter apathy, which may vary from the perception that the outcome has already been decided and that their votes do not count or will not make a difference to an understanding that that their lives are not going to change, whatever the results. The "urban apathy" that the EC is worried about has a lot to do with such thought processes which would be tough to change in the short term.

A refreshing change is seen in rural areas across the nation where political processes are reflected in the day-to-day lives of the people. The people there believe that they are responsible for the democratic Constitution of the country and hence have a stake in the running of the nation. They believe political parties are answerable to them and the vote is the tool to send the message across. They need not be told about shedding their apathy; they know that they cannot afford to be apathetic or indifferent to what is happening around them. They are the political force that has struck at the right time in our history and sent the self-righteous, self-serving politician for refresher courses in democratic governance. India as a nation owes them its gratitude for the safekeeping of its democracy.

The higher turnout in militancy-torn Baramulla is refreshing. At 58.17 per cent — the highest in three decades — more than half of the voters of the constituency have come out and spoken about their choice to represent them in the Lok Sabha. The people of the state have often been vilified for their disinterest in the democratic process but the fact remains that given a chance they would never let it go. It is for the government now to build on the trust and help the state return to the national mainstream. Elections to the state Assembly will be a fitting start to the process.

இந்து தமிழ் திசை

22 MAY 2024




# முதல்முறையாக வாக்கு செலுத்திய பழங்குடியினர்

## தொழிலதிபர் ஆனந்த் மஹிந்திரா பாராட்டு

அந்தமான் நிக்கோபார் மக்களவைத் தொகுதியில் முதன்முறையாக ஷோம்பென் பழங்குடியினர் இம்முறை வாக்களித்தனர். எளிதில் பாதிக்கக்கூடிய பழங்குடியினக் குழுக்களில் ஒன்றாக ஷோம்பென் பழங்குடியினர் கருதப்படுகின்றனர். நிக்கோபார் தீவின் அடர்ந்த வெப்ப மண்டல காடுகளில் வசிக்கும் இவர்களில் ஏழு பேர் கடந்த ஏப்ரல் 19-ம் தேதி நடைபெற்ற முதல் கட்ட வாக்கெடுப்பில் பங்கேற்று வாக்கு செலுத்தியபோது அவர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டது.

இந்நிலையில், அந்த புகைப்படங்களில் ஒன்றை தனது 'எக்ஸ்' பக்கத்தில் மஹிந்திரா நிறுவன தலைவர் ஆனந்த் மஹிந்திரா வெளியிட்டு எழுதிய பதிவு: நிக்கோபார் தீவிலிருந்து வாக்கு செலுத்திய ஏழு ஷோம்பென் பழங்குடியினரில் ஒருவர் இவர். யாராலும் தவிர்க்க முடியாத, தடுக்க முடியாத வலிமை பொருந்தியது ஜனநாயகம் என்பதை இது காட்டுகிறது. 2024 தேர்தலின் சிறந்த புகைப்படம் இதுவே. இவ்வாறு அவர் பதிவிட்டார்.

ஆனந்த் மஹிந்திராவின் கருத்தை வரவேற்று பலரும் சமூக ஊடகங்களில் பதிவிட்டுவருவதால் அவரது பதிவு வைரலாகி உள்ளது.

CH-X

Tribal Voters first time cast their vote in Andhaman & Nicobar Island - Appreciated by Industrialist Anand Mahindra.

தினத்தந்தி

22 MAY 2024

மம்தா பானர்ஜி குறித்து அவதூறு பேச்சு:

# முன்னாள் நீதிபதியான பா.ஜனதா வேட்பாளர் பிரசாரம் செய்ய 24 மணி நேரம் தடை

## தேர்தல் கமிஷன் உத்தரவு


அபிஜித் கங்கோபாத்யாய்

கொல்கத்தா, மே.22-
மம்தா பானர்ஜி குறித்து அவதூறாகபேசியதற்காக, முன்னாள் நீதிபதியான பா.ஜனதா வேட்பாளர் பிரசாரம் செய்ய 24 மணி நேரம் தடை விதித்து தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.




### முன்னாள் நீதிபதி

கொல்கத்தா ஐகோர்ட்டு நீதிபதியாக இருந்தவர் அபிஜித்கங்கோபாத்யாய். சமீபத்தில் தனது பதவியை ராஜினாமா செய்த அவர், பா.ஜனதாவில் சேர்ந்தார்.இதையடுத்து அவருக்கு அங்குள்ள டம்லக் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட கட்சி மேலிடம் வாய்ப்பு கொடுத்தது. இந்தநிலையில் கடந்த 15-ந்தேதி ஆல்டியா பகுதியில் நடைபெற்ற பிரசார பொதுக் கூட்டத்தில் பேசிய அபிஜித் கங்கோபாத்யாய், முதல்-மந்திரி மம்தா பானர்ஜி குறித்து அவதூறாகபேசியதாக, தேர்தல் கமிஷனுக்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புகார் அளித்தது.

### பிரசாரத்துக்கு தடை

இதுதொடர்பாக அபிஜித் கங்கோபாத்யாயிடம் தேர்தல் கமிஷன் விளக்கம் கேட்டது. அவரும் தனது பதிலை அனுப்பினார். அவற்றை எல்லாம் கவனமுடன் பரிசீலித்த தேர்தல் கமிஷன், அபிஜித் கங்கோபாத்யாயின் பேச்சு தேர்தல் விதிமுறைகளை மீறிய தரம் தாழ்ந்த தனிநபர் தாக்குதல் என்று கண்டனம் தெரிவித்தது.

மேலும் அவரின் இந்த பேச்சுக்காக, 24 மணி நேரம் அவர் பிரசாரம் செய்ய தடை விதித்து நேற்று உத்தரவிட்டது. இந்த தடை நேற்று மாலை 5 மணியில் இருந்து அமலுக்கு வந்தது.

Election commission censures former judge-turned-BJP candidate, bars campaign for 24 hours for low-level Personnal Attack on Mamtha

தினத்தந்தி
22 MAY 2024

உத்தரபிரதேசத்தில்

# 2 வாக்குச்சாவடிகளில் 100 சதவீத வாக்குப்பதிவு

லக்னோ, மே.22-

உத்தரபிரதேச மாநிலத்தில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற 5-ம் கட்ட தேர்தல் நடந்தது. இதில் ஜான்சி மக்களவை தொகுதிக்கும் வாக்குப் பதிவு நடந்தது.


இந்த நிலையில் ஜான்சி மக்களவை தொகுதிக்கு உட்பட்ட லலித்பூர் மாவட்டத்தில் உள்ள 2 வாக்குச்சாவடிகளில் 100 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

இது குறித்து மாவட்ட கலெக்டரும், தேர்தல் அதிகாரியுமான அக்ஷய் திரிபாதி கூறுகையில், " லலித்பூர் மாவட்டத்தின் சவுல்டா நகரில் உள்ள 277-வது வாக்குச்சாவடியில் 198 ஆண்கள், 177 பெண்கள் என மொத்தம் 375 வாக்காளர்கள் உண்டு. அவர்கள் அனைவருமே தேர்தலில் வாக்களித்தனர். அதேபோல் பம்ஹோரா நாகல் கிராமத்தில் உள்ள 355-வது வாக்குச்சாவடியில் 235 ஆண்கள் மற்றும் 206 பெண்கள் என மொத்த வாக்காளர் 441 பேரும் தேர்தலில் வாக்களித்தனர்" என்றார்.

100% voting has been recorded in 2 polling stations in utter pradesh.

Dinamalar, Dated: 22.05.2024

# 4 கோடி ரூபாய் பிடிபட்ட விவகாரம் எஸ்.ஆர்.சேகரிடம் விசாரணை



கோவை கணபதி பகுதியில் உள்ள பா.ஜ., மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர் வீடு.

**கோவை, மே 22–**

சென்னை ரயில்வே ஸ்டேஷனில், 4 கோடி ரூபாய் பிடிபட்ட விவகாரம் குறித்து, பா.ஜ., மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகரிடம், சி.பி.சி.ஐ.டி., போலீசார் விசாரணை நடத்தினர்.

ஏப்., 6ல் நெல்லை எக்ஸ்பிரசில் கொண்டு செல்லப்பட்ட 4 கோடி ரூபாயை தாம்பரம் போலீசாரும், தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளும் பறிமுதல் செய்தனர். பணத்தை எடுத்து சென்ற சதீஷ், நவீன், பெருமாள் ஆகியோர் பிடிபட்டனர்.

இவர்கள், நெல்லை பா.ஜ., வேட்பாளர் நயினார் நாகேந்திரனோடு தொடர்புடையவர்கள் என்பதால், பிடிபட்டது நயினார் நாகேந்திரனுக்காக கொடுத்து அனுப்பிய பணம் என கூறப்பட்டது. இதுகுறித்து, சி.பி.சி.ஐ.டி போலீசார் விசாரிக்கின்றனர்.

பணம் நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமானது எனக் கூறப்பட்ட நிலையில், பா.ஜ., கட்சிப் பணம் என்ற தகவலும் வெளியானது.

இது குறித்து விசாரிக்க, பா.ஜ., அமைப்புச் செயலர் கேசவவிநாயகம், பா.ஜ., மாநில பொருளாளர் எஸ்.ஆர். சேகர் உட்பட மூவருக்கு, சி.பி.சி.ஐ.டி., போலீசார் சம்மன் அனுப்பி இருந்தனர்.

இந்நிலையில், கோவை கணபதி பகுதியில் உள்ள எஸ்.ஆர்.சேகர் இல்லத்தில், சி.பி.சி.ஐ.டி., போலீசார் நேற்று திடீரென விசாரணை நடத்தினர். இரண்டு மணி நேரம் விசாரணை நடந்தது.

இது குறித்து, பா.ஜ., மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர் கூறியதாவது:

ரயிலில், 4 கோடி ரூபாய் பிடிபட்டது குறித்து விசாரிக்க, சி.பி.சி.ஐ.டி., போலீசார் சம்மன் கொடுத்தனர். கட்சிப்பணிகள் இருப்பதால், 30ம் தேதி வரை வர இயலாது; அதன் பின் தேதி குறிப்பிட்டால், வர இயலும் எனத் தெரிவித்தேன்.

சி.பி.சி.ஐ.டி.,யிடம் '10 நாட்கள் அவகாசம் தேவை' என கடிதம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். டில்லி செல்ல இன்று கிளம்பிக் கொண்டு இருந்தேன்.

அப்போது, சென்னை சி.பி.சி.ஐ.டி., – டி.எஸ்.பி., சசிதரன் தலைமையில், போலீசார் எவ்வித முன்னறிவிப்புமின்றி விசாரிக்க வந்தனர். சம்பந்தம் இல்லாத கேள்விகள் கேட்கப்பட்டன.

தமிழக அரசின் அழுத்தம் காரணமாக, பரபரப்பை ஏற்படுத்த போலீசார் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டுள்ளனர். இவ்விவகாரத்தில் விசாரணை கூடாது என, நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அதற்குள் பரபரப்பை ஏற்படுத்த வேண்டும்; பா.ஜ., மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என, போலீசார் அனுப்பப்பட்டுள்ளனர்.

விசாரணையை எதிர்கொள்ள நாங்கள் தயங்கவில்லை. 4 கோடி ரூபாய்க்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை என கூறிவிட்டோம். இருப்பினும், ஒரு வாரமாக 4 கோடி ரூபாய் பா.ஜ.,வின் பணம் என, தவறாக சித்தரித்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

News regarding 4 crore seized in Tambaram Railway station. – CBCID investigated Thiru. S.R. Sekar.


தினமணி

2 2 MAY 2024

## மம்தா மீது அவதூறு

# பாஜக வேட்பாளர் பிரசாரம் செய்ய தேர்தல் ஆணையம் ஒருநாள் தடை

கொல்கத்தா, மே 21: மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி குறித்து பொதுக்கூட்டத்தில் ஆபாசமாகவும், தரக்குறைவாகவும் பேசிய தம்லுக் மக்களவைத் தொகுதி பாஜக வேட்பாளரும், கொல்கத்தா உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதியுமான அபிஜித் கங்கோபாத்யாய 24 மணி நேரம் பிரசாரம் செய்ய தடை விதித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.


அபிஜித் கங்கோபாத்யாய

அபிஜித்தின் பேச்சு 'மிகவும் தரம் தாழ்ந்த தனிநபர் விமர்சனம். இதன் மூலம் அவர் தேர்தல் நடத்தை விதிகளை மீறியுள்ளார்' என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கடந்த 15-ஆம் தேதி ஹால்டியாவில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் முதல்வர் மம்தா குறித்து அபிஜித் மிகவும் தரக்குறைவாகப் பேசினார். முக்கியமாக, 'மம்தா உங்கள் விலை என்ன? விலை ரூ.10 லட்சமா? ஏன் உங்கள் ஒப்பனைக்கு அவ்வளவு அதிகம் செலவு செய்கிறீர்களா? மம்தாவும் ஒரு பெண்ணா? என்று எண்ணி சில நேரம் வியக்கிறேன்' என்று கூறினார்.

இது தொடர்பான விடியோ ஆதாரத்துடன் தேர்தல் ஆணையத்தில் திரிணமூல் காங்கிரஸ் புகார் அளித்தது. இதையடுத்து, அபிஜித்திடம் விளக்கம் கேட்டு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது. தனது பேச்சு குறித்து அவர் விளக்கமளித்தார்.

எனினும், இதை ஏற்காத தேர்தல் ஆணையம், மே 21-ஆம் தேதி மாலை 5 மணி முதல் அடுத்த நாள் மாலை 5 மணி வரை பிரசாரத்தில் ஈடுபடக் கூடாது என்று தடை விதித்தது.

தேர்தல் பிரசாரத்தின்போது வார்த்தைகளை மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவருக்கு ஆணையம் எச்சரிக்கை விடுத்தது.

இந்தத் தடையை எதிர்த்து தேர்தல் ஆணையத்தில் முறையீடு செய்துள்ளதாக அபிஜித் கங்கோபாத்யாய தெரிவித்தார்.

Personnal Attack on Mamtha - EC censures former Judge - turned BJP candidate, bars campaign for 24 hours

தினமணி

22 MAY 2024

# 5–ஆம் கட்டத் தேர்தலில் 62% வாக்குப் பதிவு

புது தில்லி, மே 21: திங்கள்கிழமை (மே 20) நடைபெற்ற ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தலில் 62.19 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை அறிவித்தது. இது முந்தைய 2019 தேர்தலை ஒப்பிடுகையில் 1.97 சதவீதம் குறைவாகும்.

இன்னும் இரு கட்டத் தேர்தல்கள் நிலுவையில் உள்ளன. ஏப்ரல் 19 முதல் தொடங்கிய மக்களவைத் தேர்தலின் முதல் கட்டத்தில் 66.14 சதவீதமும் (2019–இல் 69.43%), இரண்டாம் கட்டத்தில் 66.71 சதவீதமும் (2019–இல் 69.64%), மூன்றாம் கட்டத்தில் 65.68 சதவீதமும் (2019–இல் 68.4%), நான்காம் கட்டத்தில் 69.16 சதவீதமும் (2019–இல் 72.81%) வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

7 கட்டங்களில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4–ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

62% of vote polled in 5th phase of GELS. 2024

தினகரன்

22 MAY 2024

மம்தா குறித்து சர்ச்சை கருத்து

# முன்னாள் நீதிபதிக்கு 24 மணி நேரம் தடை

**தேர்தல் கமிஷன் அதிரடி**

கொல்கத்தா, மே 22: மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்ததற்காக கொல்கத்தா உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதியும், பாஜ வேட்பாளருமான அபிஜித் கங்கோபாத்யாய் பிரசாரம் செய்ய தேர்தல் ஆணையம் 24 மணி நேரம் தடை விதித்து உள்ளது.

மேற்குவங்க மாநிலம் தாம்லூக் மக்களவை தொகுதி பா.ஜ வேட்பாளராக அபிஜித் கங்கோபாத்யாய் நிறுத்தப்பட்டுள்ளார். இவர் கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி பதவியை ராஜினாமா செய்துவிட்டு மார்ச் 7ல் பா.ஜவில் இணைந்தார். தற்போது பா.ஜ வேட்பாளராக களத்தில் குதித்து உள்ளார். மே 15ம் தேதி ஹால்டியாவில் நடந்த பிரசார கூட்டத்தில் பேசிய அபிஜித் கங்கோபாத்யாய், மேற்குவங்க முதல்வர் மம்தா குறித்து சர்ச்சையான முறையில் விமர்சனம் செய்தார். இதுபற்றி தேர்தல் ஆணையத்தில் திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் புகார் அளிக்கப்பட்டது. இந்த புகார் மனுவை விசாரித்த தேர்தல் ஆணையம், மாஜி நீதிபதி அபிஜித் கங்கோபாத்யாய் பிரசாரம் செய்ய தடை விதித்து நேற்று உத்தரவிட்டது. நேற்று மாலை 5 மணி முதல் இன்று மாலை 5 மணி வரை அவர் தேர்தல் பிரசாரம் செய்ய தடை விதிக்கப்பட்டது. மேலும் பாஜ தலைவர் ஜே.பி. நட்டாவிடம், பிரச்சாரக்காலத்தில் இந்தத் தவறு மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிசெய்ய அனைத்து வேட்பாளர்களுக்கும் கட்சியின் சார்பில் ஆலோசனை வழங்குமாறும் தேர்தல் கமிஷன் கேட்டுக் கொண்டது.

இது குறித்து தேர்தல் ஆணையம் கூறுகையில்,' அபிஜித் கங்கோபாத்யாயின் கருத்து தரம் தாழ்ந்த அளவிலான தனிப்பட்ட தாக்குதல். இதுபோன்ற அருவருப்பான வார்த்தைகள் கங்கோபாத்யாயாவிடம் இருந்து வந்துள்ளன என்பது வேதனையை தருகிறது' என்றுகுறிப்பிட்டுள்ளது.

Personnal Attack on Mamtha - Former Judge bars campaign for 24 hours

தினகரன்
22 MAY 2024

### மக்களவை 6ம் கட்ட தேர்தல்

# 58 தொகுதிகளில் நாளை பிரசாரம் ஓய்கிறது

## டெல்லி உள்பட 7 மாநிலங்களில் 25ம் தேதி வாக்குப்பதிவு



புதுடெல்லி, மே 22: மக்களவை 6ம் கட்ட தேர்தல் பிரசாரம் 58 தொகுதிகளில் நாளை மாலை முடிவுக்கு வருகிறது. 25ம் தேதி அங்கு வாக்குப்பதிவு நடக்கிறது.

நாடு முழுவதும் ஏப்.19 தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை 7 கட்டமாக மக்களவை தேர்தல் நடக்கிறது. இதுவரை 5 கட்ட தேர்தல்கள் முடிவுக்கு வந்துள்ளன. முதல்கட்டத்தில் 66.14 சதவீதம், 2வது கட்டத்தில் 66.71 சதவீதம், 3வது கட்டத்தில் 65.68 சதவீதம், 4ம் கட்டத்தில் 69.16 சதவீதம், 5ம் கட்டத்தில் 60.09 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. தற்போது வரை 428 தொகுதிகளில் வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் 6ம் கட்டமாக 7 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 58 தொகுதிகளில் வரும் 25ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

பீகாரில் 8 தொகுதிகள், அரியானாவில் 10 தொகுதிகள், ஜம்மு - காஷ்மீரில் 1 தொகுதி, ஜார்கண்டில் 4 தொகுதிகள், டெல்லியில் 7 தொகுதிகள், ஒடிசாவில் 6 தொகுதிகள், உத்தரபிரதேசத்தில் 14 தொகுதிகள், மேற்குவங்கத்தில் 8 தொகுதிகள் என மொத்தம் 58 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

ஒடிசாவில் மக்களவை தேர்தலுடன் மாநில சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடப்பதால், அங்கு 43 சட்டமன்ற தொகுதியில் வரும் 25ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும். யூனியன் பிரதேசமான ஜம்மு - காஷ்மீரில் அனந்த்நாக் - ரஜோரி தொகுதியில் 3ம் கட்டத்தில் வாக்குப்பதிவு நடைபெற இருந்தது. ஆனால் மோசமான வானிலை காரணமாக வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், வரும் 25ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும். மேற்கண்ட 58 தொகுதிகளில், 889 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இவர்களுடன் அனந்த்நாக் - ரஜோரி தொகுதியைச் சேர்ந்த 20 வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.

நாளை மாலையுடன் தேர்தல் பிரசாரம் ஓய்வதால், வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக செய்து வருகிறது. 6ம் கட்டம் முடிந்தவுடன் வரும் ஜூன் 1ம் தேதி 7ம் கட்ட வாக்குப்பதிவு நடக்கிறது.

### ஸ்டார் வேட்பாளர்கள்

புதுடெல்லி மக்களவை தொகுதியில் மறைந்த ஒன்றிய அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் மகள் பன்சூரி ஸ்வராஜ் பா.ஜ வேட்பாளராக களம் இறங்கி உள்ளார். அவரை எதிர்த்து இந்தியா கூட்டணி சார்பில் ஆம்ஆத்மி மூத்த தலைவர் சோம்நாத் பார்தியும், வடகிழக்கு டெல்லியில் பா.ஜ மூத்த தலைவர் மனோஜ் திவாரி எம்பி மீண்டும் களம் இறக்கப்பட்டுள்ளார். பீகாரை சேர்ந்த அவரை எதிர்கொள்ள காங்கிரஸ் சார்பில் கன்னையா குமார் களம் இறக்கப்பட்டுள்ளார். உத்தரபிரதேச மாநிலத்தில் சுல்தான்பூரில் பா.ஜ சார்பில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் மேனகா காந்தி, ஜம்மு - காஷ்மீரின் அனந்த்நாக்-ரஜோரியில் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, மேற்குவங்கத்தில் தம்லுக்கில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அபிஜித் கங்கோபாத்யாய் (பாஜ), அரியானாவின் கர்னாலில் முன்னாள் முதல்வர் மனோகர் லால் கட்டார் (பாஜ), குருக்ஷேத்ராவில் தொழிலதிபர் நவீன் ஜிண்டால் (பாஜ), ஒடிசாவின் பூரியில் சம்பித் பத்ரா (பாஜ), சம்பல்பூரில் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் (பாஜ) உள்ளிட்டோர் 6ம் கட்ட தேர்தலில் முக்கிய வேட்பாளராக களம் இறங்கி உள்ளனர்.

6th phase of GELS, 2024 - Campaigning in 58 constituencies ends tomorrow.